# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 20.04.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

இன்றும் சில சஹாபாக்களின் சம்பவங்களை எடுத்துக் கூறுவேன். அதிலிருந்து அவர்களின் உறுதியான நிலைபாடு நிரூபணமாகும்.

ஹஸ்ரத் மியான் அப்துல்லாஹ் கான் சாஹிப், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தில் பைஅத் செய்தார்கள். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பார்க்கவில்லை. அந்த சஹாபி கூறுகின்றார்கள்:

ஸஃபர்வால் என்ற ஊரில் பிளேக் நோய் மிகுதியாகப் பரவிய காலத்தில் பிளேக் கிளர்க் ஆக நியமனம் செய்யப்பட்டு ஸியால்கோட்டில் இருந்து ஸஃபர்வால் சென்றேன். காலை வேளையில் தில்வண்டி என்ற ஊரைச் சேர்ந்த சவுத்ரி முஹம்மது ஹுஸைன் சாஹிப் என்னிடம், நீங்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை வானத்தில் உயிரோடு இருப்பதாக நம்புகிறீர்களா? என்று கேட்டார். நான் அறிவிப்பூர்வமான முறையில், 'இல்லை' என்று கூறினேன். எனது உள்ளத்தில் எந்த வகையான பாரபட்சமான சிந்தனையும் இருந்ததில்லை. அவர் கூறினார்: ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் தம்மை வாக்களிக்கப்பட்ட மஹ்தி என்று வாதிட்டுள்ளார்கள். வரவேண்டிய மஸீஹ் நானே என்றும் கூறியுள்ளார்கள்.

பனீ இஸ்ராயீல்களிலிருந்து வந்த மஸீஹ் மரணமடைந்து விட்டார்கள். உடனே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நபி என ஒப்புக்கொண்டு பைஅத் கடிதம் எழுதினேன். அவர் கூறுகிறார்: பிறகு நான் பணிநிமித்தமாக கராச்சி சென்று அங்கிருந்து ஆப்பிரிக்கா சென்றேன். அஹ்மதி அல்லாதவரான எனது தந்தை பைஅத் செய்யும் போது சிறிதும் எதிர்ப்பு காட்டவில்லை. ஆனால் அப்பகுதியிலிருந்த வஹ்ஹாபிகள் அவரை தூண்டி விட்டனர். எனது தந்தை ஊரில் முக்கியமான ஒருவராகக் கருதப்பட்டார். 1911-ல் இது நடந்தது. உமது மகன் மிர்ஸாயி ஆகி விட்டான் என்று அவரை தூண்டினர். எனது தந்தை ஆப்பிரிக்காவிலிருந்து எனக்கு கடிதம் எழுதினார். அதில் மிர்ஸா சாஹிப் மீதான நம்பிக்கையை விட்டுவிடவில்லை எனில், உமக்கு வாரிசுரிமை கிடைக்காது என்று எழுதியிருந்தார்.

அவர் தொடர்ந்து கூறுகிறார்: அப்போது நான் சுல்தான் மஹ்மூது ஸ்டேஷனில், ஸ்டேஷன் மாஸ்டராக இருந்தேன். கென்யாவில் நான் 8-10 நாட்களாக கடிதத்தை என்னிடம் வைத்திருந்தேன். ஒரு நாள் இரவு இஷா நேரத்தில் என் மனைவியிடம் அதுபற்றி கூறினேன். எனது மனைவி முற்றிலும் கல்வி அறிவு இல்லாதவள். அவள், இம்மக்கள் ஹஸ்ரத் சாஹிபை மஹ்தி என்று நம்பத் தயாராக இல்லை. நம்மை தவறாகப் பேசுமாறு ஏன் கூறுகின்றார்கள்? அல்லாஹ் நமது உணவிற்கான ஏற்பாட்டை முன்னதாகவே செய்து விட்டான். எனவே இவர்களைப் பற்றி நமக்கு எந்தக் கவலையும் இல்லை. எனவே நாங்கள் அவ்வாறு செய்வதற்கு தயாராக இல்லை என்று எழுதி விடுங்கள் என்று கூறினாள். நான் அவ்வாறே எழுதி விட்டேன். அதற்கு எனது தந்தை, நீர் எனது ஒரே மகன். எனது வாரிசும் ஆவாய். மக்கள் என்னைத் தூண்டியதால் தான் நான் அவ்வாறு எழுதினேன் என்று பதில் எழுதினார்.

நான் மீண்டும் எழுதினேன்: திரும்பவும் எனக்கு அவர் இதே பதிலை வழங்கினார். நான் விடுப்பில் வந்தபோது அந்த நேரம் ஒன்பது மணியாக இருந்தது. எனது சகோதரர் முஹம்மது ஹுஸைன் சாஹிப் மர்ஹூம் முஹம்மது ஆலம் சாஹிப் மற்றும் நான் ஆகியோர் தந்தையுடன் உரையாடிக் கொண்டிருந்தோம். எனது தந்தையார் கூறினார். நான் மிர்ஸா சாஹிபை அவர் ஸியால்கோட்டில் வேலை பார்த்த காலத்திலிருந்தே அறிவேன். அவரை நான் சந்தித்து வந்தேன். மிக நல்ல மனிதராக இருந்தார். எனது முன்னிலையில் நடந்த ஒரு சம்பவம் நினைவில் உள்ளது. ஸியால்கோட்டிற்கு கிழக்கிலுள்ள ஓர் ஊரைச் சேர்ந்த முஸ்லிம் ஜமீன்தார் ஒருவர் அவர்களிடம் வந்தார். மிர்ஸா சாஹிபைப் பார்த்து கூறினார். அதாவது மஸீஹ் மவ்வூது (அலை)

அவர்களைப் பார்த்து, மிர்ஸாஜி! நீங்கள் வரவிருக்கிற மஹ்தி என்று தெரிகிறது என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபின் வயது 20-22 இருக்கலாம். அப்போது எனது வயதும் கூட கிட்டத்தட்ட அவ்வளவு தான் இருக்கும். அவர் கூறுகிறார்: எனது தந்தையின் நாவிலிருந்து இந்த வார்த்தை வெளிப்பட்டதும் நான் எனது தந்தையிடம் கூறினேன். உங்கள் முன்னிலையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பார்த்து இவ்வாறு ஒரு ஜமீன்தார் கூறியதன் மூலம் அல்லாஹ் தங்களுக்கு தனது சான்றை பூர்த்தியாக்கியுள்ளான்.

உடனே எனது தந்தை, மிர்ஸா சாஹிப் உண்மையாளராகவே இருப்பினும் நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று கூறினார். உடனே நான், இஸ்திக்ஃபார் செய்தவாறு அவ்விடத்தை விட்டு அகன்று விட்டேன்.

**ஹஸ்ரத் ஷேக் அப்துர் ரஷீத் சாஹிப் உடைய ஒரு அறிவிப்பில் அன்னார் கூறுகின்றார்கள்:**

மவ்லவி முஹம்மது அலி போப்டி, பட்டாலா வந்திருந்தார். எனது வீட்டில் தங்கியிருந்தார். எனது பெற்றோர் என்னை வீட்டை விட்டு வெளியேற்றியிருந்தனர். ஒருநாள் எனது தந்தையாரின் நண்பராக இருந்த மஹர் வல்து என்பவர் என்னை சந்தித்து விட்டு கூறினார். என்னுடன் வாரும்! நாம் மவ்லவி முஹம்மது அலியிடம் போய் பேசுவோம். அவர் என்ன கூறுகிறார்? என்று நாம் அறிய முயற்சி செய்வோம். அதாவது மவ்லவி முஹம்மது அலி அஹ்மதி அல்லாதவர். அவருடன் விவாதிக்க விரும்பினர்.

கூறுகிறார்: அந்நாட்களில் எனக்கு மிகவும் ஆர்வம் இருந்தது. எனவே உடனே நான் மவ்லவி முஹம்மது அலியுடன் பேசுவதற்காகச் சென்றேன். அவர், மவ்லவி சாஹிபின் எதிரில் போய் நின்றதும், மஹர் வல்து! இந்த காஃபிரை என் முன்னால் ஏன் கூட்டி வந்தீர்? என்று கூறினார். மஹர் வல்துக்கு இந்த வார்த்தை வருத்தமடையச் செய்தது. எனக்கும் தான் வருத்தமாக இருந்தது. எனினும் சான்றை பூர்த்தியாக்க வேண்டும் என்று விரும்பினேன். மஹர் வல்துவும் எனக்கு ஆதரவு அளித்தார்.

அவர் கூறினார்: மவ்லவி சாஹிபே! இந்த சிறுவனுக்கு உங்களால் விளக்கிப் புரிய வைக்க முடியாவிட்டால் மற்ற மிர்ஸாயிகளுக்கு நீங்கள் எதனைப் புரிய வைப்பீர்கள்? இவர் சிறுவர் தான். இவருக்கே உம்மால் புரிய வைக்க முடியா விட்டால் மற்றவருக்கு எப்படி புரிய வைப்பீர்கள்? இதனைக் கூறியதும் அவர் **கைஃப அன்த்தும் இஸா நஸல ஃபீகும்** என்ற ஹதீஸை படிக்கத் தொடங்கினார். பிறகு தானே தன் மனம் போன போக்கில் அதற்கு விளக்கமும் தரத் தொடங்கினார். நிறைய நேரம் அவர் எடுத்துக் கொண்ட பிறகு நான் கூறினேன். நான் சொல்வதைக் கேளுங்கள். இந்த ஹதீஸின் வார்த்தைகளிலிருந்தே அது விளக்கம் தரத்தக்க ஹதீஸ் என்று தெரிகிறது என்று விளக்கம் தந்தேன். பின்னர் மவ்லவி சாஹிபிடம் இது தொடர்பாக கேள்விகள் கேட்ட போது, அவர் எரிச்சலடைந்தார். இந்த ஹதீஸ் புகாரி மற்றும் முஸ்லிமிலும், முஸ்னத் அஹ்மதிலும் உள்ளது. இது, ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களின் அறிவிப்பாகும். அதன் வார்த்தைகளாவது, **கைஃப அன்த்தும் இஸா நஸல இப்னு மர்யம ஃபீகும் வ இமாமுகும் மின்கும்** என்றும், சில ஹதீஸ்களில் **உம்மகும் மின்கும்** என்றும் வருகிறது. அதாவது, இப்னு மர்யத்திற்கு ஒப்பான அம்மனிதர் இறங்கும் போது உங்களது நிலை எவ்வாறிருக்கும்? உங்கள் இமாம் உங்களிடமிருந்தே தோன்றுவார். நான் கூறியது போன்று இன்னோர் ஹதீஸில் வருகிறது.

அவர் உங்களுக்கு மத்தியில் இருக்கின்ற காரணத்தால் உங்கள் இமாமாக இருந்து கடமையை நிறைவேற்றுவார். இந்த ஹதீஸை அந்த மவ்லவி எடுத்து வைத்தார். நான் அவரிடம் கூறினேன்: நீங்கள் இதற்கு தவறான விளக்கம் தருகிறீர்கள். பிறகு நான் அவரிடம் **மல் மஸீஹுப்னு மர்யம இல்லா ரஸூல்** மற்றும் **வமா முஹம்மதுன் இல்லா ரஸூல்** ஆகிய வசனங்களை எடுத்து வைத்தேன். பிறகு **ஃபஅக்கூலு கமா கால அப்துஸ் ஸாலிஹ்** (அந்த நல்லடியார் கூறுவது போன்று கூறுவேன்) என்ற ஹதீஸைப் படித்தேன். அது ஒரு பெரிய ஹதீஸாகும். அதன் விரிவுரையையும் கூறினேன். அவர் மிகவும் சிரமத்திற்கு ஆளாகி விட்டார். கடுமையான கோபம் கொண்டார். மஹர் வல்துவைப் பார்த்துக் கூறினார். இவன் திருந்தமாட்டான். இந்த மிர்ஸாயிகள் மிகவும் கடினமானவர்களும், மரியாதை தெரியாதவர்களும் ஆவர் என்று நான் கூறவில்லையா? இனி நான் எந்த விளக்கமும் சொல்லமாட்டேன். இதனால் மஹர் வல்துவுக்கு வெட்கமாகி விட்டது. அவரது முகத்தில் வெட்கம் தென்பட்டது. ஏனெனில் அந்த மவ்லவியால் அறிவிப்பூர்வமான எந்த பதிலும்

தர முடியவில்லை. தப்ஸீரும் செய்ய முடியவில்லை என்பதை அவர் உணர்ந்தார். நாங்கள் புறப்பட்டு வந்து விட்டோம். மஹர் வல்து எனது தந்தையிடம் வந்து கூறினார். மவ்லவி முஹம்மது அலியால் அப்துர் ரஷீதுக்கு தெளிவாகப் புரிய வைக்க முடியவில்லை. அந்த மவ்லவி கோபத்தால் நிறைந்து விட்டார். ஆனால் பையன் புரிந்து கொள்வான் என்றார்.

இதுதான் இதுவரை மவ்லவிகளின் நிலையாகும். மவ்லவிகளின் அறிவு இவ்வளவுதான். ஆனால் அல்லாஹ்வின் அருளால் நமது சிறுவர்களின் அறிவு கூட இந்த மவ்லவிகளின் அறிவை விட அதிகமாகும். அவர்களால் நமது சிறுவர்களைக் கூட சமாளிக்க முடியாது. ஆனால் பிடிவாதத்திற்கு எந்த சிகிச்சையும் இல்லை.

ஒரு சம்பவம் எனக்கு நினைவுக்கு வருகிறது. கண்ணியத்திற்குரிய சாகிப் ஸைர்வி சாஹிப் எழுதியுள்ளார்கள். அதாவுல்லாஹ் சாஹிப் புகாரி என்ற ஒரு மவ்லவி இருந்தார். அவர் ஒருமுறை சொற்பொழிவாற்றினார். எனது காதில் அவரது சப்தம் விழுந்தது. நான் அப்போது அந்தப் பகுதியில் இருந்தேன். அதாவுல்லாஹ் சாஹிப் புகாரி என்ற அந்த மவ்லவி பெரிய ஆலிமாக இருந்தார். இறைவனே என்னிடம் வந்து மிர்ஸா சாஹிப் உண்மையாளர் என்று கூறினாலும் நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். இதுவே இவர்களின் ஈமானிய நிலையாகும்.

பிறகு ஒரு அறிவிப்பு அலி முஹம்மத் உடையதாகும். மவ்லானா அபுல் ஹஸன் சாஹிப் பற்றியதாகும். மவ்லானா அபுல் ஹஸன் சாஹிபின் நிலையைப் பற்றி அலி முஹம்மது சாஹிப் இவ்வாறு கூறுகிறார்: அப்பகுதி முழுவதும் இறைவன் அவர் மூலமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பெயரை டேரா காஸி கான் பகுதி முழுவதும் சென்றடையச் செய்தான். எதிரிகள் அவர்களுக்கு மிகவும் கஷ்டம் தந்தனர். ஆனால் அவர் மிகவும் சகிப்புத்தன்மையுடன் பொறுத்துக் கொண்டனர். எதிர்ப்பை எப்போதுமே பொருட்படுத்தியதில்லை. எப்போதும் தப்லீக் செய்து வந்தார். புரிய வைத்து வந்தார். ஹஸ்ரத் ஹாபிஸ் குலாம் ரஸுல் சாஹிப் வஸீராபாதி கூறுகிறார்கள். ஒருமுறை எனக்கு மிகவும் கஷ்டம் ஏற்பட்டது. எதிர்ப்பினால் அழுத்தப்பட்டவாறு காதியான் வந்து சேர்ந்தேன்.

ஹுஸுர் (அலை) அவர்கள் கூறினார்கள்: ஹாபிஸ் சாஹிப் ஏன் பதற்றம் அடைகிறீர்கள்? அப்போது ஹுஸுருடைய வார்த்தையிலிருந்து அன்னார் எனக்கு பொருளாதார உதவி செய்ய விரும்புகிறார்கள் என்று உணர்ந்தேன். ஆனால் நான் அந்த நோக்கத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் வரவில்லை. நான் வந்த நோக்கம் எனது உள்ளம் திருப்தியடைந்து எதிர்ப்பினால் உள்ளம் கலங்காமல் இருப்பது தான். ஏனெனில் நபியின் அண்மை மூலம் அவர்களின் தூய்மையாக்கும் ஆற்றலில் இருந்து மனிதன் ஆற்றலைப் பெறுகிறான். எனவே என்னை உறுதிப்படுத்திக் கொள்ளவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சமூகத்தில் வந்தேன். அவர் கூறுகிறார்: இறைவனால் நியமிக்கப்பட்டவரிடம் பணம் வாங்குவதற்காக செல்லக் கூடாது. இன்னும் கூறுவதாயின் அவரிடம் பொருள்களை அன்பளிப்பாக வழங்க வேண்டும். ஹுஸுர் எனக்காக மிகவும் துஆ செய்தார்கள். அதன் விளைவால் எனது உள்ளம் திருப்தி அடைந்தது. அல்லாஹ்வின் அருளால் ஹுஸுரைப் பற்றி எனது உள்ளத்தில் ஒரு நிமிடம் கூட அவர்களின் உண்மை குறித்து ஐயம் எழுந்ததில்லை.

**ஹஸ்ரத் பாபு அப்துர் ரஹ்மான் சாஹிப் கூறுகின்றார்கள்:**

எனது தன்னடக்கம், தாழ்மையான குணத்தின் காரணமாக எனது நண்பர்கள், உறவினர்கள், எனது வட்டாரத்தினர் மகிழ்ச்சி அடைந்திருந்தனர். என்னைப் பாராட்டவும் செய்தனர். ஆனால் நான் பைஅத் செய்த செய்தியைக் கேட்டவுடன் எனது மூதாதையர்களைத் தவிர எல்லா உறவினர்களும் எதிர்க்கத் தொடங்கி விட்டனர். மூதாதையர்களான உறவினர்கள் அனைவரும் பைஅத்தில் இணைந்து விட்டனர். நண்பர்கள், வட்டாரத்தினர், பிற உறவினர்கள் ஆகியோர் எதிரியாகவே ஆகிவிட்டனர். இதுவே நபிமார்களின் ஜமாஅத்துடன் செய்யப்படுகின்ற நடைமுறையாகும். நபிமார்களுடன் இவ்வாறே நடந்து கொள்ளப்படுகிறது. முதலில் பாராட்டியவர்களே பிறகு எதிரிகளாகி விடுகின்றனர். எனினும் இவர் நல்லவர்; மிக்க நல்லவர் என்பதை ஒப்புக்கொள்வர். முதலிலும் ஒருமுறை இதுபற்றி கூறியுள்ளேன். ஷேக் மஹ்மூது அஹ்மது சாஹிப் மஸ்ஹர் பற்றி கூறினேன். அவர் பைஸலாபாத்திலுள்ள ஓர் ஊருக்கு சென்ற போது, அங்கு அஹ்மதி அல்லாதவர்கள்

இருந்தனர். இவரை புகழ்ந்தனர்; மிகவும் நல்லவர்; தூயவர்; தக்வா உள்ளவர்; உண்மை பேசுபவர். ஆனால் ஒரேயொரு குறை அவரிடம் உள்ளது. அது அவர் காதியானி என்பதாகும். பிறகு இதுவே பெரிய குறையாக தென்படுகிறது. இவ்வாறாக அவர் கூறுகிறார். எல்லாரும் எனக்கு எதிரியாகி விட்டனர். விதவிதமான தொல்லைகளைக் கொடுத்தனர். சில நேரங்களில் பஞ்சாயத்து செய்வர். தண்ணீரைத் தடுப்பர். சில வேளைகளில் மவ்லவிகளை அழைத்து நமக்கு எதிராக சொற்பொழிவு ஆற்றச் செய்வர். உறவினர்களை, நண்பர்களை, பொதுமக்களை நமக்கு எதிராகத் தூண்டுவர்.

ஒருமுறை ஒரு கடைக்காரர் நம்முடன் இருந்தார். அவர் பால் வியாபாரி. அவரை பால் தர விடாமல் தடுத்தனர். பணியாளர்களை நமக்கு வேலை செய்ய விடாமல் செய்தனர். திருமண சம்பந்தங்களைத் தடுத்தனர். எவராவது அஹ்மதியின் வீட்டருகில் கடந்து சென்றால் அவர் காஃபிர் ஆகிவிடுவார் என்று மக்களுக்கு போதனை செய்தனர். இறைவல்லமை இதற்கெல்லாம் எவ்வாறு பதிலடி தருகிறது. எந்த மவ்லவி எமக்கு எதிராக போதனை செய்தாரோ அவர் வந்து எனது வீட்டில் உணவு உண்டு வந்தார்கள். அதாவது போதனை ஒன்று; செயல் வேறென்றாக இருந்தது. மவ்லவியின் பேச்சையும் செயலையும் பார்த்து மக்கள் வெட்கமுற்றனர்.

மேலும் கூறுகிறார்: நான் பைஅத் செய்த பிறகு அஹ்மதியல்லாதவர்களின் பின்னால் தொழுவதை விட்டு விட்டேன். தனியாக தொழுவேன். அல்லது எங்களில் ஒருவரை இமாம் ஆக்கிக் கொள்வேன். இது குறித்தும் வட்டாரத்திலுள்ளவர்கள் சண்டையிட்டனர். குழப்பம் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு நாங்கள் பள்ளிவாசலுக்கு சென்று எங்களுள் ஒருவரை இமாமாக்கி ஜமாஅத்தாக தொழுவதைக் கூட விட்டு விட்டோம். மாறாக, எனது வீட்டிலேயே தொழுகையை ஜமாஅத்துடன் தொழுது வந்தேன். அந்த வீட்டை நான் வாடகைக்கு எடுத்திருந்தேன் என்றும் கூறுகிறார். அங்கு நான் தனியாக தொழுகை நடத்தி வந்ததால் வீட்டில் உரிமையாளர் என்னை வீட்டை காலி செய்யச் சொல்லி விட்டார். பிறகு இன்னாரின் இடத்தை நான் வாடகைக்கு பிடித்தேன். அங்கும் ஜமாஅத்தாக தொழத் தொடங்கினோம். இந்நாட்களில் ரம்ஸான் என்ற பெயருடைய ஓர் அஹ்மதியிடம் இருந்து மூன்று கடைகளும் சிறு நிலமும் வாங்கினேன். இந்நாட்களில் டாக்டர் பஷாரத் சாஹிப் என்ற அஹ்மதி Assistant Surgeon ஆக வந்தார். ஜமாஅத்திற்கு அந்த டாக்டர் வந்ததில் மேலும் வலு கிடைத்தது. அவர் மிகவும் ஆர்வமுடையவர். மக்ரிப், இஷா, ஃபஜ்ர் ஆகிய தொழுகைகளை அந்தக் கடையில் ஜமாஅத்தாக தொழுவேன். டாக்டர் சாஹிபை நாங்கள் இமாமாக ஆக்கிக் கொள்வோம். அவரது கடை தெருவின் மையப்பகுதியில் இருந்தாலும் எந்தப் பயமுமின்றி தொழ வருவார். தொழுகைக்கு இமாமத் செய்வார். டாக்டர் சாஹிப் எப்போதும் தப்லீக் செய்து வருவார். அவர் எப்போதும் கூறி வருவார். ஓர் உடையில், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வஃபாத் ஆகி விட்டார் என்று எழுதி அதனை கோட்டு செய்து அணிந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகின்றேன்.

**ஹஸ்ரத் ஷேக் அதாவுல்லாஹ் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எனது பைஅத் ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டதாக காதியானிலிருந்து கடிதம் வந்தது. கூடவே சில ஜமாஅத் நூல்களும் அல்ஹகம் என்ற பத்திரிகையும் அனுப்பப்பட்டிருந்தது. நாங்கள் அதனை வெளியிட்டோம். அது பெரிய விவாதமாகியது. அதன் பிறகு எதிர்ப்பு இன்னும் சூடாகியது. அத்துடன் ஆங்காங்கே கூட்டம் நடத்துவர். எங்களை வலுக்கட்டாயமாக பிடித்து இழுத்துக் கொண்டு போய் தவ்பா செய்யுமாறு நிர்ப்பந்திப்பார்கள். மிர்ஸா சாஹிபிடமிருந்து தவ்பா செய்யுங்கள். அவரது முரீதாக இருக்கக் கூடாது என்று கூறப்படும். கூறுகின்றார்: எங்களுள் பலவீனமான சிலர் இதனால் நழுவிவிட்டனர். அவர்களால் சமாளிக்க முடியவில்லை. அவர்களிடம் உறுதிப்பாடு இல்லை. எந்த அளவுக்கு ஆகி விட்டது என்றால் ஹஸ்ரத் ஹாபிஸ் சூஃபி தஸவ்வர் ஹுஸைன் சாஹிப், ஹஸ்ரத் ஷேக் அப்துல்லாஹ் சாஹிப் ஆகியோர் சூஃபி சாஹிபின் முரீதாக இருந்தனர். அவர்களுடன் நான் மட்டுமே எஞ்சியிருந்தேன். மற்ற அனைவரும் எதிர்ப்பை சமாளிக்க முடியாமல் விலகி விட்டனர். அதாவது இந்த மூன்று பேர் தவிர மற்ற அனைவரும் அஹ்மதிய்யத்தை விட்டு விட்டனர். இவர்கள் மூவர் மட்டும் எதிர்ப்பை சகித்துக் கொண்டு இஸ்திகாமத் (உறுதியான நிலைத்து நிற்றலை) காட்டினர்.

எழுதுகிறார்: சூஃபி சாஹிபுக்கு அல்லாஹ் உறுதியான நிலைநிற்றலை வழங்கினான். காதியான் சென்று அதன் மூலம் ஒளியில் இருந்து பங்கு பெற்றனர். ஆனால் இறைவன் தனது சிறப்பான ஞானத்தால் மட்டுமே எனது உள்ளத்தை மறைமுகமான முறையில் வெளிச்சமாக்கி விட்டான். சூஃபி சாஹிப் காதியான் சென்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பார்த்து விட்டு வந்தார்கள். அதனால் அவரது ஈமான் வலுவாக இருந்தது. ஆனால் நான் இதுவரை காதியான் போகவில்லை. இருந்தும் இறைவன் அருள்புரிந்தான். எனது உள்ளத்தை ஒளியுடன் வைத்தான். வெளிச்சமாக்கினான். எந்த எதிர்ப்பும் என்னிடம் தீய விளைவை ஏற்படுத்தவில்லை. அவர்கள் என்னை மிரட்டிய அளவுக்கு, அழுத்தம் கொடுத்த அளவுக்கு எனது ஈமான் உறுதியாகிக் கொண்டே சென்றது. அவர்கள் என்னை தவ்பா செய்யுமா கூறும் போது நான் மீண்டும் மீண்டும் எதிலிருந்து தவ்பா செய்யச் சொல்கிறீர்கள் என்று கேட்பேன்.

ஒருமுறை எதிரிகள், ஒரு கூட்டம் போட்டு மிகவும் கூச்சலிட்டனர். அவர்களின் இலக்கு முழுக்க முழுக்க நானாகவே இருந்தேன். அதாவது ஹஸ்ரத் மியான் அப்துல் மஜீத் கான் சாஹிப் அனைவரின் இலக்காகவும் ஆகி விட்டார். அவர்கள் எனக்கு எதிராக பல தீர்மானங்கள் போட்டனர். ஊரை விட்டு நீக்கம் செய்வதாக பயமுறுத்தினர். போலீஸையும் எனக்கு எதிராகத் தூண்டினர். என்னை குழப்பவாதி, கட்டுப்படாதவன் என்று பெயரிட்டனர். எனது உயிருக்கம் ஊறுவிளைவிக்க நினைத்தனர். இந்நிலையின் தாக்கத்தால் ஓரிரவு நான் காட்டிற்குச் சென்றேன். அல்லாஹ்வின் உதவி தனக்கு எவ்வாறு கிடைத்தது என்று விளக்குகிறார். ஓரிரவு நான் காட்டிற்கு சென்று கிப்லாவை நோக்கி திரும்பி நின்று எனக்கு தெரிந்த முறையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை விளித்துக் கூறினேன். ஹுஸூர் இந்த ஆபத்தான நிலையில் எனக்கு ஆதரவு அளிக்க ஏற்பாடு செய்யுங்கள. நான் மிகவும் பணிவுடன் துஆ செய்தேன். அழுதழுது துஆ செய்தேன். அல்லாஹ் எனது மன்றாடலைக் கேட்டான்.

இங்கு நான் ஒரு விளக்கம் கூற விரும்புகிறேன். பீர்களிடம் சென்று வேண்டப்படுகின்ற ஷிர்க்கான காரியம் போன்றதன்று இது. பீர்களிடம் கேட்பதைப் பார்க்கின்றோம். இங்கு அவர் தனது மதிப்பீட்டின்படி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை மனதில் கொண்டு இந்த அநீதியிலிருந்து அல்லாஹ் தன்னை பாதுகாக்க வேண்டும் என்று துஆ செய்தார். இதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கேட்கவில்லை. கேட்டது அல்லாஹ்விடம் தான். இதனை அவரது இந்த வரி தெளிவுபடுத்துகிறது. அல்லாஹ் எனது மன்றாடலை கேட்டான் என்கிறார். நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கேட்டேன். அவர்கள் வழங்கினார்கள் என்று கூறவில்லை. பொதுவாக பீர்களின் கபர்களிடம் சென்று துஆ கேட்கப்படுவது போன்று, இன்ன பீர் சாஹிப் எமது துஆவைக் கேட்டு இன்ன பொருளை பரிசாகத் தந்தார் என்று கூறுவது போன்ற விஷயமல்ல.

அவர் கூறுகிறார்: எனது மன்றாடலையும் வருத்தத்தையும் அல்லாஹ் கேட்டான். இதே கவலையுடன் இரவில் தூங்கி விட்டேன். கனவில் நான் பார்க்கிறேன். எதிரிகள் எனது வீட்டை சூழ்ந்து விட்டார்கள். நாளாபுறமும் குரல் கொடுக்கிறார்கள். இம்மனிதரை கொலை செய்யுங்கள் என்கின்றனர். அதே வேளையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எனது முன்னால் தோன்றுகிறார்கள். எனது கைகளை தனது கைகளால் பற்றி எனது முகத்தை வானத்தை நோக்கி திருப்பினார்கள். நீர் வானத்தை நோக்கி பறந்து செல்லும் என்கிறார்கள். இவ்வாறு என்னைப் போன்ற ஒரு மனிதர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது தூய்மையாக்கும் ஆற்றலின் உதவியால் பூமியிலிருந்து வானத்திற்கு சென்று விட்டார். எதிரிகள் செயலற்றவர்களாக பார்த்துக் கொண்டு நிற்கின்றனர். இதற்கு பிறகு எனது கண்கள் மகிழ்ச்சியில் திழைத்தவாறு திறந்தன. எனக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உண்மையிலேயே சத்தியவானும் நேர்வழியில் நிற்பவரும் ஆவார் என்ற முழுமையான உறுதி ஏற்பட்டது. இவ்வாறு மறுநாள் காலையில் எனது வீட்டைச் சுற்றி மக்கள் கூடினர். நான் அவர்களிடம் தெளிவாகக் கூறினேன். இறைவன் தனது ஆற்றலால் எனக்கு சக்தி வழங்கியுள்ளான். எனது உடல் ரம்பத்தால் அறுக்கப்பட்டு துண்டு துண்டாக்கினாலும் எனது உள்ளத்தையும் முகத்தையும் இந்த உண்மையிலிருந்து திருப்ப முடியாது.

கூறுகிறார்: மறுநாள் இரவில் மீண்டும் கனவில் பார்க்கிறேன். போலீஸ் எனது வீட்டைச் சுற்றியுள்ளது. காவல்துறையினர் கூறுகின்றனர். இவர் பொதுமக்களிடமிருந்து தப்பி விட்டார். ஆனால் இவர் குழப்பத்தையும் அமைதியற்ற சூழலையும் உருவாக்கி வைத்துள்ளார். இபபோது அரசு இவருக்கு நெருக்கடி கொடுக்கும். இவர் திரும்பா விட்டால் கொல்லப்படுவார். காவல்துறையினரின் இந்த தாக்குதல் கனவில் எனக்கு மிகுந்த துக்கத்தை ஏற்படுத்தியது. ஆனால் திடீரென்று நேற்று இரவைப் போன்றே எனது எஜமானர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தோன்றுகின்றார்கள். அதேபோன்று எனது இரு கைகளையும் பரிவுடன் பற்றி எனது முகத்தை நோக்கி வைக்கிறார்கள். வானத்திற்கு ஏறிச் செல் என்கிறார்கள். நான் நேற்றை போன்றே பூமியிலிருந்து வானத்திற்கு சென்றேன். காவல்துறையினரின் தாக்குதல்களிலிருந்து தப்பிக்கின்றேன். இந்த இரு கனவுகளின் விளைவாக எனது ஈமான் உறுதியாகவும் பாறைகளைப் போன்று உறுதியாகவும் ஆகிவிட்டது. ஹுஸீர் (அலை) அவர்களுடைய ஒளி என் உள்ளத்தில் அறுபடாதவாறும் துண்டிக்கப்படாதவாறும் அமர்ந்து விட்டது. எவரும் அதை உடைக்கவும் முடியாது. துண்டிக்கவும் முடியாது. அல்ஹம்துலில்லாஹ். அல்ஹம்துலில்லாஹ். ஸும்ம அல்ஹம்துலில்லாஹ்.

கூறுகின்றார்: இப்போது உள்ளத்தில் ஓர் உத்வேகம் பிறந்துள்ளது. இந்த தேர்ந்தெடுக்கப்பட்டவரின் சந்திப்பு என்ற பாக்கியமும் கிடைக்க வேண்டும் என்ற ஆவல் பிறந்துள்ளது. ஏனெனில் அதுவரை அவர் ஹுஸீரைப் பார்க்கவில்லை. எனவே நான் ஹுஸீருக்கு கடிதம் எழுதினேன். அதற்கு பதில் வந்து. மியான் அப்துல் மஜீத் உடனே காதியான் வாருங்கள் என்று ஹுஸூர் எழுதியிருந்தார்கள்.

அல்லாஹ் எவ்வாறு ஈமானை உறுதிப்படுத்துகின்றான். இந்நிலையை இன்றும் கூட அல்லாஹ் உருவாக்குகின்றான். பலர் அதனை எழுதவும் செய்கின்றனர்.

ஹஸ்ரத் அமீர் கான் சாஹிப் அறிவிக்கின்றார்கள்: நான் பைஅத் செய்து விட்டு தாருல் அமான் காதியானிலிருந்து எனது ஊருக்கு திரும்பி வந்தேன். மெஹ்தாப் கான் என்ற முஸ்லிம் ஒருவர் தன்னை பெரிய ஆளாகக் கருதிக் கொண்டிருப்பவர். சாதாரணமாக எழுதப் படிக்கத் தெரிந்தவர். ஆனால் தனக்கு எல்லாம் தெரியும் என்று வாதிப்பவர். இவர் எம்மை எதிர்க்கத் தொடங்கினார். வாய்ப்பேச்சில் எல்லை கடந்து விட்டார். ஆனால் நான் பொறுமையுடன் இருந்து வந்தேன். கடைசியில் அவருடைய குடும்பத்தில் பிளேக் நோய் பரவியது. அவரது மருமகள், மைத்துனி அவரது ஒரே வாலிப மகன் ஆகியோர் பிளேக்கிற்கு இரையாகினர். அவருக்கு ரொட்டி சுட்டுத் தரவும் யாரும் இல்லாமல் ஆகி விட்டது. பக்கத்து ஊரில் திருமணம் செய்யப்பட்ட இவரது மகள் வீட்டுக்குச் சென்று தினமும் ரொட்டி உண்டு வந்தார். ஆனால் மகள் வீட்டில் சென்று ரொட்டி சாப்பிடுவது மரணத்தை விட மோசமானதாக இருந்தது. மெஹ்தாப் கானிற்கு அப்போது வயது 60க்கு சற்று அதிகமாகி இருந்தது. இவரது அசையா சொத்தாக ஒரு சிறு நிலம் இருந்தது. ஒருநாள் ஒரு மஸ்ஜிதில் ஃபஜ்ருக்குப் பிறகு திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருந்தேன். என்னிடம் வந்து எனது நிலையைப் பாருங்கள் என்று கூறியவாறு, எனக்கு மிர்ஸா சாஹிபுடன் எந்தப் பகையும் இல்லை. நிலைமை மோசமான பிறகுதான் இந்த எண்ணம் வருகிறது.

இவை சஹாபாக்களின் இஸ்திகாமத் தொடர்பான சம்பவங்களாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வழங்கிய ஜமாஅத் உறுதியான பாதத்துடன் நிலைத்து நின்றது. இன்றும் அவ்வாறே உள்ளது. பல கடிதங்கள் எனக்கு வருகின்றன. இது சம்பந்தமான சம்பவங்களை அக்கடிதங்கள் கூறுகின்றன. இந்த உறுதியைக் காட்டுபவர்களுள் ஆண்களும் உள்ளனர். பெண்களும் உள்ளனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய குவ்வத்தே குத்ஸியாவினால் இது சஹாபாக்களிடம் அமைந்தது. அல்லாஹ் அதனை இப்போது வரை தொடரச் செய்துள்ளான். அல்லாஹ் அந்த சஹாபாக்களின் தகுதியை உயர்த்துவானாக! அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டார்கள். உறுதியான நிலைநிற்றலையும் காட்டினார்கள். உறுதியான பாதத்துடன் நிலை நின்றார்கள். அல்லாஹ் அவர்களின் சந்ததிகளிடமும் இஸ்திகாமத்தை நிலைநாட்டுவானாக! இப்போது இணைபவர்கள், வருங்காலத்தில் ஜமாஅத்தில் இணைபவர்கள் ஆகியோருக்கும் இந்த நிலைத்து நிற்றலை வழங்குவானாக!

இன்னும் சில சம்பவங்களை எடுத்து வைக்கின்றேன். அவை இஸ்திகாமத் என்ற கருத்தின் அடிப்படையில் அல்ல. மாறாக, அல்லாஹ் அற்புதமான முறையில் எவ்வாறு சஹாபாக்களுக்கு பாதுகாப்பினை வழங்கினான் என்று விளக்கக்கூடியவையாகும். அல்லாஹ் அவர்களுடன் எவ்வாறு நடந்து கொண்டான் என்பதை விளக்கக் கூடியவையாகும். நிச்சயமாக இந்த சம்பவங்கள் நமது ஈமானை அதிகப்படுத்தக் காரணமாக இருக்கின்றன.

**ஹஸ்ரத் மிர்ஸா பரக்கத் அலி சாஹிப் கூறுகின்றார்கள்:**

4 ஏப்ரல் 1905 ல் நடந்த பூகம்பத்தில் காங்கடா மாவட்டத்தில் ஒரு கட்டடத்திற்கு அடியில் இந்த எளியவன் சிக்கிக் கொண்டேன். மிகவும் சிரமப்பட்டு நான் வெளியில் கொண்டு வரப்பட்டேன். பாபு குலாப்தீன் என்பவர் அரசாங்கத்தின் Sub Divitional Officer ஆக இருந்தார். இவர் இதற்கு கண்கண்ட சாட்சியாக உள்ளார். இவர் இன்று ஸியால்கோட்டில் உள்ளார். இந்த சம்பவத்திற்கு ஓரிரு மாதங்களுக்கு முன்பு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த பூகம்பம் பற்றி முன்னறிவித்திருந்தார்கள். இந்த பூகம்பம் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறும்போது நானும் காதியானில் இருந்தேன். ஹுஸுரினால் வெளியிடப்பட்ட பிரசுரத்தை எடுத்துக் கொண்டு தரம்சாலா என்ற பகுதிக்குச் சென்றேன். அது அப்பகுதியில் விநியோகிக்கப்படவும் செய்தது. இந்த எளியவன் அங்கு கிளர்க் ஆக பணியாற்றினேன். தற்காலிகப் பணியாக இருந்ததால் எனக்கு விடுப்பும் கிடைத்தது. எனவே அவ்வப்போது மிர்ஸா ரஹீம் பேக் சாஹிப் என்ற சஹாபியை சந்திப்பதற்காக சென்று வந்தேன். மிர்ஸா ரஹீம் பேக் சாஹிப் பெரிய குடும்பத்தைச் சார்ந்தவர். இவரது இன்னொரு சகோதரர் அஹ்மதியாக இருக்கவில்லை. பிறகு இவரது மனைவி மக்கள் இவருடன் சேர்ந்து அஹ்மதி ஆகினர். மற்றவர்கள் இவரை கடுமையாக எதிர்த்தனர். பிறகு அங்கு வந்து தங்கியிருந்த மற்ற அஹ்மதிகளும் இந்த அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டனர். ஆனால் அங்கு வாழ்ந்த 90% பேர் மரணித்து விட்டனர். அத்தகைய கடும் பூகம்பத்திலிருந்து அஹ்மதிகள் மட்டும் தப்பித்தது ஓர் மகத்தான அடையாளமாக இருந்தது.

அவர் கூறுகிறார்: இதனை முழுமையான முறையில் விரிவாக எழுதுகிறேன். உண்மையைத் தேடுவோர், இறை உதவி அஹ்மதிகளுக்கு இருப்பதைக் காண்பர். எவர் உண்மையை அறிய விரும்புவோரா அவர் இந்த பூகம்ப நிகழ்வை விளங்கினால் நிச்சயமாக இறைவனின் ஆதரவு அஹ்மதிகளுடன்தான் இருக்கிறது என்று உணர்வார்.

கூறுகிறார்: எனது குடும்பம் குலாப் கான் சாஹிபுடைய குடும்பம், மிஸ்திரி அல்லாஹ் பக்ஷ் சாஹிப் ஸியால்கோட்டி அவரது உடன் இருந்தவரான குலாம் முஹம்மத் மிஸ்திரி மற்றும் ஏனைய அஹ்மதி சகோதரர்கள் இந்த பூகம்பத்திலிருந்து பாதுகாப்பாக இருந்த விஷயத்தில் இறை வல்லமை வெளிப்பட்ட விதம் அவர்களின் ஒவ்வொருவரும் ஒரு தனித்தனி அடையாளமாக தென்படுகின்றனர். சிறப்பாக மிஸ்திரி இலாஹி பக்ஷ் சாஹிப் ஒரு நாளுக்கு முன்பாக அங்கிருந்து தற்செயலாக ஊருக்குத் திரும்பியது, இன்னும் பூகம்பத்தின் போது அங்கிருந்தும் கடையில் இருந்து வெளியில் வந்தது, மேலும் பூகம்பத்தில் சிக்கி வியத்தகு முறையில் வெளிவந்தது இவை அனைத்தும் அடையாளங்களாகும்.

அவர் கூறுகின்றார்: இதனை தனியாக ஒரு நூலாக கொண்டு வர வேண்டும் என்பது எனது விருப்பமாகும். எனினும் இங்கு சம்பவங்கள் சுருக்கமாக எடுத்துக் கூறப்பட்டன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் சந்திந்தது தொடர்பான சம்பவங்கள் இங்கு விளக்கப்பட்டன. அவர் கூறுகின்றார்: இந்த பூகம்பத்திற்கு சில நாட்களுக்குப் பிறகு நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு முன் வந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பெஹஸ்தி மக்பராவில் உள்ள ஒரு மாமரத்தின் கீழ் கூடாரத்தில் தங்கியிருந்தார்கள். நான் அவர்களை சந்தித்தபோது ஹஸரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என்னிடம் பல கேள்விகளைக் கேட்டார்கள். கட்டிட இடிபாடுகளிலிருந்து எப்படி வெளியில் வந்தீர்கள்? என்று கேட்டார்கள். என்னை மிஸ்திரி அல்லாஹ் பக்ஷ் சாஹிப் உடைய கட்டில்தான் பாதுகாத்தது. அது பெரிய சுவரை தாங்கிக் கொண்டது. அதனால் சுமை அதிகமாக என்னை நசுக்கவில்லை. அது போன்று ஹுஸுர் மற்ற அஹ்மதிகளைக் குறித்து கேள்வி கேட்டார்கள். எல்லா அஹ்மதிகளும் பாதுகாக்கப்பட்டது பற்றி அஹ்மதிகள் சாட்சி கூறினர். அதே

வேளையில் ஹுஸூர் (அலை) அவர்கள் அதற்கு முன்பாகவே பிரசுரம் மூலமாக அதுபற்றி தெரிவித்து விட்டார்கள். பூகம்பத்தினால் ஜமாஅத்திலுள்ள ஒருவருக்கு கூட பாதிப்பு ஏற்படவில்லை என்று அறிவித்து விட்டிருந்தார். அல்லாஹ்விடமிருந்து ஹுஸூருக்கு அதுபற்றி தெரிவிக்கப்பட்டது என்ற உறுதி எனக்கிருந்தது. அதுவன்றி தர்மசாலா பகுதியிலிருந்து எந்த அஹ்மதியும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் வந்து அதுவரை தகவல் கூறவில்லை. தர்மசாலா பகுதியிலிருந்த வந்த முதல் மனிதர் இவர் தான். இவரிடம் தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நடந்த இடத்தைப் பற்றி எல்லா விபரமும் கேட்கிறார்கள். எந்த அஹ்மதியும் பூகம்பத்தால் பாதிப்பு அடையவில்லை என்ற பிரசுரத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முன்னரே விநியோகம் செய்திருந்தார்கள். எனவே காங்டா பூகம்பத்தில் அஹ்மதிகள் பாதுகாக்கப்பட்டதை ஓர் அடையாளமாக கூறியிருந்தார்கள். குறிப்பாக நான் பூகம்பத்தின் பிடியில் இருந்து தப்பித்தது ஒரு பெரும் அடையாளமாகும். இவ்விசயங்கள் எழுத்துப்பூர்வமாகவே அறிவிக்கப்பட்டன. இந்த கண்கண்ட அடையாளங்களிலிருந்து பாடம் பெறுபவர் பேறுபெற்றவர். அதன் மூலம் அவர் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் மீது ஈமான் கொள்ள வேண்டும்.

**ஹஸ்ரத் சவுத்ரி அப்துல் ஹகீம் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

தற்செயலாக நான் மவ்லவி பத்ருத்தீன் சாஹிப் அஹ்மதியை சந்தித்தேன். அவர் ஊரின் ஒரு தனியார் பள்ளியின் தலைமையாசிரியராக இருந்தார். இவர் எனக்கு அல்ஹகம் பத்திரிகைளை படிக்கக் கொடுத்தார். எனக்கு நினைவிருக்கிறது. அதன் முதல் பக்கத்தில் அப்போதைய புது வஹி ஒன்று அச்சிடப்பட்டிருந்தது. காலத்தின் இமாமின் தூய வார்த்தைகளும் அதில் இடம்பெற்றிருந்தன. அவர் கூறுகிறார்: நான் அதனை படித்தேன். அதனைப் படித்து எனது உள்ளத்தில் ஓர் அன்பு பிறந்தது. உடனே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் போக வேண்டும் என்று தோன்றியது. அல்லாஹ்வின் அருளும் சாதகமாயிருந்தது. அஹ்லே ஹதீஸ் மவ்லவிகளின் குழப்பும் முயற்சிகளுக்கு நெடுகிலும் கூட சிறிது காலத்திற்குள்ளேயே ஏற்றுக் கொண்டு விட்டேன். மவ்லவி பத்ருத்தீன் சாஹிப் என்னை உடனே காதியான் செல்லுமாறு ஆலோசனை தந்தார். என்னுடன் இன்னும் அஹ்லே ஹதீஸ் மவ்லவியும் வரத் தயாரானார். அந்த மவ்லவி சுல்தான் முஹம்மது சாஹிப் அஹ்லே ஹதீஸின் சிறப்பான சீடராக இருந்தார்.

எழுதுகிறார்: அப்போது எனது சம்பளம் 15 ரூபாய் ஆக இருந்தது. வறுமை நிலையில் நான் விடுப்பு எடுத்தேன். என்னிடம் ரயில்வே பாஸ் வாங்கும் உரிமை எனக்கில்லை. எனவே நான் என்னுடன் வந்த நண்பருடன் சேர்ந்து அமிர்தசரஸ் வரை டிக்கெட் எடுத்தேன். எம்மிடம் காதியான் செல்லத்தக்க அளவு காசில்லை. டிக்கெட் அமிர்தசரஸுடன் முடிந்தது. பட்டாலா போகிற இரயிலில் ஏறி விட்டோம். ஆனால் எங்களிடம் எட்டு அணா தான் இருந்தது. அதில் இரு இரு அணாவுக்கு விர்காவிற்கு டிக்கெட் எடுத்தோம். விர்கா ஸ்டேசனை அடைந்ததும் எமது டிக்கெட் முடிந்து விட்டது. ஆனால் நாங்கள் இறங்கவில்லை. வண்டி புறப்பட்டது. அடுத்த ஸ்டேசனுக்கு மத்தியில் வண்டி சென்று கொண்டிருந்தது. அப்போது ஒரு டிக்கெட் பரிசோதகர் எல்லா டிக்கெட்டுகளையும் பரிசோதித்தார். எல்லா டிக்கெட்டையும் பார்க்கத் தொடங்கினர். எங்கள் டிக்கெட், கடந்த ஸ்டேசனுடன் முடிந்து விட்டது. எங்களிடம் பைசாவும் இல்லை. எனவே நாங்கள் இருவரும் மிகவும் கவலைக்குள்ளானோம். அல்லாஹ்வின் பாதத்தை பற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. நாங்கள் இருவரும் சேர்ந்து இறைவனிடம் துஆ செய்தோம். நாங்கள் உனது உண்மையான மஸீஹிடம் செல்கிறோம். எங்களிடம் எதுவும் இல்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது கொண்ட அன்பு மட்டுமே உள்ளது. எங்களை மறைப்பாயாக! இழிவு மற்றும் அவமானத்திலிருந்து காப்பாற்றுவாயாக! அல்லாஹ் எங்கள் துஆவை ஏற்றுக் கொண்டான். ரயில்வே ஆய்வாளர் எங்களிடம் டிக்கெட்டை கேட்டார். கடந்த ஸ்டேசனுடன் முடிந்த அந்த டிக்கெட்டைக் காட்டினோம். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அவர் டிக்கெட்டை வாங்கி நன்றாகப் பார்த்து விட்டு தந்து விட்டார். எதுவும் சொல்லவில்லை. மற்றவர்களைப் பார்க்க போய் விட்டார். இது எங்களுக்கு ஓர் அற்புதமாகும். அல்லாஹ் தனது உண்மையான மஸீஹிற்காக இவ்வாறு எங்கள் குறைகளை திரையிட்டான். எங்களை அவமானத்திலிருந்து காப்பாற்றினான். இந்த சம்பவம் எங்கள் ஈமான் உறுதிப்பட காரணமாக அமைந்தது. ஹஸரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சத்தியம் எங்களுக்கு சூரியனைப் போன்று வெளிப்பட்டது. பட்டாலாவில் இறங்கி கால்நடையாக காதியான் புறப்பட்டோம். ளுஹர் நேரத்தில் தாருல் அமானை சென்று சேர்ந்தோம்.

**தலைமையாசிரியரான ஹஸ்ரத் அல்லாஹ் தத்தா சாஹிப் கூறுகின்றார்:**

அல்லாஹ் என்னை ஆயிரக்கணக்கான மரணங்களிலிருந்து, விபத்துகளிலிருந்து பாதுகாத்தான். நான் பாம்பை பிடித்திருக்கிறேன். பாம்பின் மீது ஏறியிருக்கிறேன். பாம்பு என் மீது ஏறியிருக்கிறது. அல்லாஹ் ஒவ்வொன்றில் இருந்தும் மயிரிழையில் என்னைக் காப்பாற்றினான்.

**ஹஸ்ரத் மாஸ்டர் தாவேகான் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்:**

அமிர்தசரஸில் நடந்த சம்பவமாகும். ஒருமுறை இங்கு பிளேக் நோய் மிகவும் கொடூரமாக இருந்தது. நான் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டிற்கு வந்தேன். எனது மனைவி வாசலில் நின்றாள். நான் என்ன விசயம்? என்று கேட்டேன். அவர் கூறினாள். வீட்டினுள் எலிகள் செத்துக் கிடக்கின்றன. பதற்றமடைந்தாள். நான் அவளிடம் கவலைப்பட வேண்டாம். நம்முடைய ஜமாஅத் பிளேக் நோயில் இருந்து பாதுகாக்கப்படும். நான் பிறகு வாரியலால் பெருக்கி வீட்டை சுத்தம் செய்தேன். மறுநாளும் அவ்வாறே நடந்தது. எலிகளுடன் பல புழுப்பூச்சிகளும் செத்தன. நான் மீண்டும் அதனை கூட்டி சுத்தம் செய்து விட்டு பயப்படாதே! என்று மனைவிக்கு ஆறுதல் கூறினேன். நமது ஜமாஅத் பாதுகாக்கப்படும். மூன்றாவது நாள் இரவு 12.00 மணிக்கு எனது மனைவி கூறினாள். எனது உடலில் வீக்கங்கள் தோன்றி உள்ளன. அதாவது பிளேக் நோயின் கட்டிகள் தோன்றின. நான் மிகவும் ஆறுதலுடன் உறுதியுடன் கூறினேன். பயப்படாதே! நான் காலையிலேயே ஹஸ்ரத் சாஹிபிற்கு துஆவுக்கு கடிதம் எழுதுவேன் என்றேன். இவ்வாறு நான் காலையில் ஹுஸூருக்கு கடிதம் எழுதினேன். என் கருத்தின்படி அக்கடிதம் காதியான் சென்று கூட சேர்ந்திருக்கவில்லை. எனது மனைவி முற்றிலும் ஆரோக்கியமாகி விட்டாள். இவ்வாறே மறுநாள் அதற்கு மறுநாள் எனது மகன் ஒரு வயது நிரம்பிய அப்துல் கரிமுக்கு வீக்கங்கள் தோன்றின. ஹுஸூருக்கு துஆவுக்கு கடிதம் எழுதினேன். வீட்டினருக்கு ஆறுதல் வழங்கினேன். பிறகு அதுவும் தன்னாலேயே குணமாகியது.

அக்காலத்தில் பிளேக் மிகக் கடுமையாக இருந்தது. தினமும் 200 அல்லது 250 பேர் மரித்தனர். இதுபற்றி நான் சிறிது விளக்க விரும்புகிறேன். பிளேக் நோய் பரவியதும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சில வழிகாட்டல்களை வழங்கினார்கள். அது அவருக்கு தெரியுமோ தெரியாதோ அல்லது சரியாக புரியவில்லையோ தெரியவில்லை. சஹாபாக்கள் அதனை உடனே அமல்படுத்தவே முயல்வர். வழிகாட்டல் சற்று முன்னே பின்னே வந்து சேர்ந்திருக்கலாம். எவ்வாறிருப்பினும் இது அவரது ஈமானின் உறுதியைக் காட்டுகிறது. அவரது ஈமானின் உறுதியை மட்டுமின்றி மனைவி மக்களின் ஈமானின் உறுதியையும் காட்டுகிறது.

ஆனால் ஹஸரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வழிகாட்டல் வழங்கியிருந்தார்கள். எல்லா இடத்திலும் பிளேக் நோய் பரவியபோது அன்னார் கூறினார்கள்:

லாஹூரில் இதனை பிரசுரமாக வெளியிட்டால் நல்லது. எந்த வீட்டிலாவது எலி செத்தால், நோய் அருகில் இருந்தால் உடனே அந்த இடத்தை விட்டு விட வேண்டும். இது எனது கட்டளையாகும். இம்மக்கள் இது லாஹூருக்காக என்று நினைப்பார்கள். ஆனால் இது கட்டளையாகும். நோய் அருகில் இருந்தால் அவ்விடத்தை விட்டு சென்று அதிலிருந்து தப்ப முயலவே வேண்டும். அதுவும் ஊருக்கு வெளியில் திறந்த வெளியில் தங்க வேண்டும். வெளிப்புற காரணிகளை கைவிடக் கூடாது என்பதும் இறை கட்டளையாகும். அசுத்தமான இருட்டான இடத்தில் இருக்கக் கூடாது. பிளேக் நோய் இருந்தாலும் சரி. இல்லா விட்டாலும் சரி. ஆடை சுத்தமாக இருக்க வேண்டும். உடலையும் தூய்மையாக்க வேண்டும். துஆ இஸ்திக்ஃபாரில் மூழ்கியிருக்க வேண்டும்.

மேலும் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் காலத்திலும் பிளேக் நோய் வந்தது. அந்தப் பகுதியில் முஸ்லிம்களின் இராணுவமும் குவிந்திருந்தது. அங்கு கடுமையான பிளேக் நோய் வந்தது. மதினாவில் ஹஸ்ரத் அமீருல் மூஃமினீனிடம் தகவல் வந்ததும் அவர்கள் கட்டளை அனுப்பினார்கள். அந்த இடத்தை விட்டு அகன்று ஏதாவது மலை உச்சிக்கு போய் விட வேண்டும். இவ்வாறு படைகள் மலைக்கு மேல் ஏறியதும் பாதுகாக்கப்பட்டன. அப்போது ஒரு மனிதர் ஆட்சேபனையும் செய்தார். அல்லாஹ்வின் தக்தீரை விட்டு ஓடுகிறீர்களா? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கூறினார். ஆம்! இறைவனது ஒரு தக்தீரை விட்டு இன்னொரு தக்தீரிடம் ஓடுகிறேன். அல்லாஹ்வுடைய தக்தீருக்கு வெளியில் இருக்கும் செயல் எது? மேலும் வலுக்கட்டாயமாக ஒரு மூஃமின் தன்னை சிரமத்ததில் போடக்கூடாது என்றும் கட்டளை இடப்பட்டுள்ளது.

மேலும் கூறினார்கள்: அல்லாஹ் என்னிடம் தெளிவுபடுத்தியுள்ளான். இறைவன் தனது வஹி மூலமாக இரு வாக்குறுதிகளை தந்துள்ளான். ஒன்று, இந்த வீட்டில் இருப்பவர்களை பிளேக் நோயிலிருந்து பாதுகாப்பான். அவன் கூறினான்: இன்னீ உஹாஃபிளு குல்ல மன்பித்தார். இரண்டாவது வாக்குறுதி, நமது ஜமாஅத் பற்றியதாகும். இன்னல்லஸீன ஆமனூ வலம் யல்பிஸூ ஈமானஹூம் பிளுல்மின் ஃபஉலாயிக லஹுமுல் அம்ரு வமுஹ்ததூன். ஈமான் கொண்டு ஈமானுடன் எந்த அநீதியையும் கலக்காதவர்களுக்கு பாதுகாப்பு உண்டு. அவர்களே நேர்வழி பெற்றவர்கள். அவர்களுக்கு இறைவனிடமிருந்து வாக்குறுதி உண்டு. அவர்கள் பாதுகாக்கப்படுவார்கள். அவர்கள் இறைவனது வழிகாட்டலை அமல்படுத்துவார்கள். அவர்கள் தமது உட்புற பலவீனங்கள் குறைகளை அகற்றி விடுவார்களா. தமது நஃப்ஸின் தீமைகளின் பக்கம் குனியமாட்டார்கள். பலர் பைஅத் செய்து செல்கிறார்கள். ஆனால் தமது அமலை சரியாக்குவதில்லை. வெறுமனே கையோடு கை வைப்பதால் என்ன ஆகப்போகிறது? அல்லாஹ் உள்ளத்தின் நிலைகளை நன்கறிகிறான். இந்த வாக்குறுதி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு தரப்பட்டது. ஒவ்வொரு பிணியிலும் கஷ்டங்களிலும் இருந்து தப்பிப்பதற்கு நாம் நமது ஈமானை பார்ப்பது அவசியமாகும். அந்த அளவுக்கு தமது ஈமானை வலுப்படுத்த முயல்கின்றனர்.

**ஹஸ்ரத் மவ்லவி சூஃபி அதா முஹம்மது சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்திப்பது எனக்கு மிகவும் சிரமமாக இருந்தது. ஏனெனில் எனக்கு விடுப்பு கிடைப்பதில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜெஹ்லம் வருவதாக பத்திரிகை செய்தி வந்தது. எனக்கு ஜெஹ்லம் செல்லவும் அனுமதி கிடைக்காது. ஆனால் மிகவும் நிலைகுலைந்திருந்தேன். நான் வீட்டில் உள்ளோரிடம் கூறினேன். நாளை ஞாயிற்றுக்கிழமை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வருகிறார்கள். நீங்கள் யாரிடமும் சொல்ல வேண்டாம். நான் செல்கிறேன். வழி மிகவும் கரடுமுரடானது. இரவு நேரம். மலைப்பாதை. பகலில் கூட அதில் செல்வது சிரமம். நான் இறைவன் மீது தவக்குல் வைத்தவாறு சென்றேன். தற்செயலாக எனக்கு முன்னால் ஒரு விளக்கு சென்று கொண்டிருந்தது. எனக்கு முன்னால் யாராவது சென்று கொண்டிருக்கலாம். இறைவா! இறைவா! என்று கூறியவாறு ஓடிக்கொண்டே அம்மலைப்பாதையை கடந்தேன். ஸ்டேசனுக்குள் வரும்போது வண்டி புறப்பட தயாராக நின்றது. அதில் ஏறி ஜெஹ்லம் வந்தேன். ஹுஸுரை சந்திக்கும் பேறு பெற்றேன்.

**ஹஸ்ரத் மவ்லானா குலாம் ரஸூல் சாஹிப் ராஜேகி கூறுகின்றார்கள்:**

நான் அப்போது இளைஞனாக இருந்தேன். கபூர்தலாவில் இருந்த போது ஓரிரவு கனவு வந்தது. ஓர் யானை. அதன் கீழ் நான் வந்து விட்டேன். அதன் வயிறு என் மேல் இருந்தது.விழித்ததும் அப்துல் மஜீத் கான் சாஹிப் என்னிடம் கூறினார். மவ்லவி சாஹிப், இன்று ஆற்றில் வெள்ளம் வந்துள்ளது. அங்கு இன்பச் சுற்றுலா செல்லப் போகிறோம். நாம் யானையின் மீது போகிறோம். நீங்களும் தயாராகுங்கள். நான் கூறினேன். நான் வரமாட்டேன். காரணம் இன்று இரவு நான் கடுமையான எச்சரிக்கும் கனவு ஒன்று கண்டேன். நான் யானையின் கீழ் வந்து விட்டேன். இந்தக் கனவை சொன்ன பிறகும் அவர்கள் அதேபோன்று சொல்லிக் கொண்டே இருந்தார்கள். நான் மீண்டும் மீண்டும் மறுத்து வந்தேன். இந்தக் கனவு கண்டதை வைத்து மீண்டும் மீண்டும் மறுத்து வந்தேன். இந்தக் கனவு கண்டதை வைத்து எனக்கு இதயத்தில் ஒரு நிம்மதியின்மை இருந்தது. யானையின் மீது சவாரி செய்து போக வேண்டும் என்று கான் சாஹிப் சொன்னதும் எனது மனதில் இன்னும் கடும் பதற்றம் ஏற்பட்டது. உடனே நான் கடுமையாக மறுத்தேன். கூட வரமாட்டேன் என்றேன். பிறகு கான் சாஹிபுடன் இன்னும் சிலரும் என்னை வற்புறுத்தினர். நாம் செல்வதுதான் தீர்மானிக்கப்பட்ட விஷயம் போலும் என்று கருதினேன். எது நடக்க வேண்டுமோ அது நடக்கவே செய்யும் என்று நினைத்து நானும் விருப்பமில்லாமல் தாயாரானேன். பல யானைகள் தயாராயின. மூன்று அல்லது நான்கு பேர் ஒரு யானையில் சவாரி செய்தோம். கான் சாஹிப் என்னையும் ஒரு யானையில் ஏற்றினார். நதியில் சென்றதும் நான் கண்ட கனவு வெளிப்படவில்லை. ஆனால் வேறு ஒரு வகையில் நிறைவேறத் தொடங்கியது.

நாங்கள் யானையிலிருந்து இறங்கி ஆற்றோரத்தில் நின்று ஆற்றைப் பார்த்துக் கொண்டிருந்தோம். ஒரு வாலிபர் ஆற்றுப் பாலத்தில் இருந்து ஆற்றுக்குள் குதித்து நீரில் மூழ்கி வெளியேறினார். அருகில் உள்ள

வழியின் மூலம் வெளியில் வந்தார். நானும் நீச்சல் தெரிந்துள்ளேன். நான் கூறினேன். சகோதரரே! நீண்ட தூரம் போய் தூரத்திலுள்ள வழியின் மூலம் வெளியில் வாரும் என்று கூறினேன். அவர் கூறினார். ஆற்றின் வேகம் அதிகமாக உள்ளது. எனவே வெகுதூரம் மூழ்கிப் போய் வெளியேறுவது சிரமம் என்றார். நீச்சல் தெரியும் எனில் பிறகு என்ன பயம்? என்று கேட்டேன். அவர் கேட்டார். உமக்கு நீந்தத் தெரியுமா? நான் கூறினேன். ஆம்! எனக்கு நீந்தத் தெரியும். அவர் கூறினார். அப்படியானால் நீர் செய்து காட்டும். நான் கூறினேன் நன்று; நான் செய்கிறேன் என்றவாறு லங்கோடு அணிந்து பாலத்திலிருந்து நதிக்குள் பாய்ந்தேன். முதன் முறையாக சரியாக மூழ்கி கடந்து வந்து விட்டேன். ஆனால் இரண்டாவது முறையாக சற்று தூரத்தில் போய் வருவதற்காக பாலம் ஏறி குதித்த போது தற்செயலாக நான் குதித்த இடம் சுழலாக இருந்தது. தண்ணீர் செக்கு போன்று வேகமாக சுழன்று கொண்டிருந்தது. நான் விழுந்ததும் அதில் சிக்கிக் கொண்டேன். மிகவும் முயன்றேன். வெளிவருவதற்கு முயன்றேன். எனது முயற்சி வீணானது. தண்ணீரின் வலுவான ஆற்றலுக்குள் சிறிது நேரம் சிக்கி விட்டேன். வெளிப்படையான முறையில் அதிலிருந்து வெளியேறுவது சாத்தியமில்லாமல் இருந்தது. எனது போராடும் ஆற்றல் அனைத்தும் செயலற்று விட்டது. சில நிமிடங்களுக்குள் எனது வாழ்வு முடியப் போவதாக உணர்ந்தேன். பாலத்திற்கு மேலிருந்து இதனைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் கூச்சலிட்டனர். ஐய்யய்யோ! மவ்லவி சாஹிப் மூழ்கிறாரே! என்று அலறினர். இவ்வாறு அலறுவதை விட எல்லாரும் தங்கள் தலைப்பாகைகளைக் கழற்றி ஆற்றில் வீசினால் அதனைப் பற்றிக்கொண்டு வெளியேற வழியை நாடியிருப்பேன். ஆனால் யாருக்கும் அந்த யோசனை வரவில்லை. நான் முற்றிலும் உலக வாழ்க்கையை விட்டு நம்பிக்கை இழந்து விட்டேன். எனது வாழ்வின் சில நிமிடங்களே எஞ்சியுள்ளன என்ற உணர்வு ஏற்பட்டது. நான் இறுதி மூச்சு விட்டுக்கொண்டிருந்தேன். இந்நிலையில் இறை நியதி இன்னொரு காட்சியை மாற்றியது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பரக்கத் மற்றும் அன்பளிப்பாக அன்னாரின் வழிகாட்டலின் கீழ்தான் கபூர்தலாவுக்கு பயணமே மேற்கொண்டிருந்தேன். எனவே ஓர் இறை நியதி அங்கு தோற்றமளித்தது. நான் தண்ணீருக்குள்ளும் வெளியிலும் தவித்துக் கொண்டிருந்தேன். நடக்கின்ற அனைத்தும் எனது ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாக நடந்து கொண்டிருந்தது. ஓர் வலுவான கரம் என்னை அந்த சுழற்றலிருந்து வெளியே எறிந்தது. எந்த அளவுக்கு வேகமாக எறிந்தது எனில் ஆற்றோரத்தில் உள்ள மரத்தின் கிளை எனது கையில் இருந்தது. அந்த மரம் ஆற்றோரத்தில் இருந்தாலும் அதன் கிளை ஆற்றின் சற்று தூரம் வரை நீண்டிருந்தது. அதனை நான் பற்றியிருந்தேன். அதனைப் பற்றியவாறு வெளியேறி ஆற்றோரத்தில் நீண்ட நேரம் அமைதியாக இருந்து விட்டு கரைக்கு வந்தேன். அப்போது எனக்கு அந்தக் கனவு ஞாபகம் வந்தது. இறை நியதி என்னை ஓர் யானைக்குக் கீழ் கொண்டு வருவது என்பதை வேறு வடிவில் நிறைவேற்றியது தெரிய வந்தது. வெளிப்படையாக அந்த ஆற்றங்கரைக்கு யானை மூலமாக வந்தடைந்தோம். ஆனால் நான் யானையின் வயிற்றின்கீழ் வந்தது வெள்ளத்தின் வடிவில் வெளிப்பட்டது. மேலும் நான் மூழ்குவதிலிருந்து தப்பியது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அன்பளிப்பாக இருந்தது. அவர்களின் வழிகாட்டலின்படி நான் கபூர்தலா வந்தது, இயக்கத்திற்காக தப்லீக் பணியை மேற்கொண்டது ஆகிய காரணத்தினால் தான் அழிவிலிருந்து தப்பித்தேன். அதுவன்றி தப்பிப்பது சாத்தியமற்றதாக இருந்தது.

இந்த சம்பவங்கள் யாவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சஹாபாக்களின் ஈமானிய நிலை, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இருந்த உறுதி ஆகியவற்றை எடுத்துக் காட்டுகிறது. ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் இவ்வாறு இதனை விளக்கியுள்ளார்கள். இதுவே ஓர் உலகவாதியாக இருந்தால் இதனை தற்செயல் நிகழ்வு என்று கூறுவார். ஆனால் மவ்லவி சாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய துஆ, கபூர்தலா பயணம் ஆகியவை தான் தப்பிக்க காரணம் என்று கூறியுள்ளார்கள். இதுவே அவர்களது ஈமானிய நிலையாகும். இதனை நாம் கவனிக்க வேண்டும். அல்லாஹ் நமக்கு அதற்கு வாய்ப்பளிப்பானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 20.04.2012**

Translated by : Muallim M. NIZAMUDEEN

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456